SURESH' IAS ACADEMY




# 24.09.2026 செய்திகள்

## தேர்தல் ஆணையர்கள் நியமன வழக்கு

- தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கி, அவருக்குப் பதிலாக பிரதமர் சார்பில் நியமிக்கப்படும் மத்திய அமைச்சர் இடம்பெறும் வகையில், 2023-ஆம் ஆண்டு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி நிபந்தனைகள், பதவிக்காலம்) சட்டம் இயற்றப்பட்டது.
- இதற்காக மத்திய அரசு தாக்கல் செய்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து மசோதா சட்டமானது.

» **தேர்தல் ஆணையம் சுதந்திரமாக இருந்தால் மட்டும் போதாது**

- தேர்தல்கள் நியாயமான நடைபெறுவதற்கு அந்த ஆணையம் சுதந்திரமாக செயல்படுவது அவசியம்.
- அரசின் தலையீட்டில் இருந்து தேர்தல் ஆணையர்கள் நியமன நடவடிக்கையைப் பாதுகாக்கும் பொருட்டு 2023-ஆம் ஆண்டே உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்துள்ளது.
- அந்தத் தீர்ப்பின்படி பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழு அளிக்கும் ஆலோசனையின்பேரில், தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும்.
- இந்தத் தீர்ப்பின் மூலம் தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பான அரசியல் சாசன கொள்கை ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ளது.
- எனவே, இந்த விவகாரத்தை அதிக நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்பளித்தார்.

SURESH'